[13th February 1958

ANNEXURE I.

30—10—57 தேதி “தினத் தந்தி” யிலிருந்து எடுக்கப்பட்ட உண்மையான நகல்.

முத்துராமலிங்க தேவர் மீது கொலை வழக்கு!

“இமானுவேல்” கொலை பற்றி கோர்ட்டில் வழக்கு வருகிறது!

மந்திரி சுப்பிரமணியம் அறிவிப்பு.

“இமானுவேல்” என்ற பள்ளர் (அரிஜன்) வெட்டிக் கொலை செய்யப் பட்டது பற்றி கோர்ட்டில் கொலை வழக்கு தொடரப்போவதாக மந்திரி சி. சுப்பிரமணியம் சட்டசபையில் நேற்று அறிவித்தார்.

சென்னை, அக். 30—ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்த ஜாதி சண்டையின் போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இமானுவேல் என்ற பள்ளர் (அரிஜன்) கொலை செய்யப்பட்டதாகவும், அந்த கொலை மிக கொடிய முறையில் பரமக்குடி பஸ் நிலையத்தில் பகிரங்கமாக நடந்தது என்றும் சட்ட சபையில் ஆர். சீனிவாச அய்யர் (காங்கிரஸ்-பட்டுக்கோட்டை) சொன்னார்.

சமாதான கூட்டம்.

அந்த கொலைக்கு முந்திய நாள் இமானுவேலும் முத்துராமலிங்க தேவரும் கலெக்டர் ஆபீசில் நடந்த சமாதான கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்றும் அக்கூட்டத்தில் முத்துராமலிங்க தேவரை இமானுவேல் எதிர்த்து பேசினார் என்றும், அதன் பின் “ஒரு பள்ளன் என்னை எதிர்த்து பேசிவிட்டானே” என்று முத்துராமலிங்க தேவர், அங்குசாமி தேவரிடம் தெரிவித்ததாகவும், அங்குசாமி தேவர், இமானுவேலை கொலை செய்ததாகவும் சீனிவாச அய்யர் பேசினார்.

வெட்கம்! வெட்கம்!

மேற்கண்டவாறு சட்ட சபையில் பேசியபோது காங்கிரஸ் மெம்பர்கள் “வெட்கம், வெட்கம்” என்று கூச்சல் போட்டார்கள்.

முத்துராமலிங்க தேவரின் வலது கையாகிய சசிவர்ண தேவர் எழுந்து “அங்குசாமி தேவரிடம் முத்துராமலிங்க தேவர் அவ்வாறு சொன்னதை ருசுப்படுத்த முடியுமா?” என்று கேட்டார்.

கொலை வழக்கு.

அது சமயம் நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் குறுக்கிட்டு “இமானுவேல் கொலை செய்யப்பட்டது பற்றிய விவாதங்களை சட்டசபையில் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இமானுவேலை கொலை செய்தது பற்றி கொலை வழக்கு தாக்கல் செய்வதற்கு சர்க்கார் முடிவு செய்து இருக்கிறது” என்று அறிவித்தார்.

கொலை வழக்கு தொடரப் போவதாக மந்திரி அறிவித்ததால், இமானுவேல் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி மேற்கொண்டு பேசாமல் சீனிவாச அய்யர் நிறுத்திக் கொண்டார்.